සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Islam

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8	இஸ்லாம்

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(01) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. ஆமுல் ஹுஸ்ன் என்பதன் பொருள்,
1. நபி (ஸல்) அவர்கள் பிறந்த வருடம்
2. மி.ராஜ் நிகழ்வு இடம்பெற்ற வருடம்
3. துக்க ஆண்டு
4. ஹிஜ்ரத் நிகழ்ந்த ஆண்டு

02. ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர் எவ்வாறு அறபியில் அழைக்கப்படும்?
1. ரிவாயத்
2. இஸ்னாத்
3. அஸ்மாஉர் ரிஜால்
4. ஹுக்ம்

03. ஸுரா அல்மாஊனில் யதீம் என்பதன் பொருள்,
1. அற்பப் பொருள்
2. கூலி கொடுக்கும் நாள்
3. அநாதை
4. ஏழை

04. அல் அமீன் என்பதன் பொருள்,
1. நம்பிக்கையாளர்
2. உண்மையாளர்
3. இறையச்சமுடையவர்
4. தர்மம் செய்பவர்

05. சிறுவர்களில் முதலாவதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்,
1. அபூபக்கர் (ரழி)
2. அலி (ரழி)
3. உஸ்மான் (ரழி)
4. ஸைத் பின் ஹாரிஸா (ரழி)

06. ரமழானில் கடைசி பத்தில் நிறைவேற்றப்படுகின்ற முக்கிய அமல்,
1. இ.திகாப் இருத்தல்
2. அல்குர்ஆன் ஓதல்
3. இரவுத் தொழுகை
4. பிரார்த்தனை புரிதல்

07. நபி (ஸல்) அவர்கள் இரகசிய பிரச்சாரம் செய்த வருடங்கள்,
1. 2 வருடங்கள்
2. 3 வருடங்கள்
3. 4 வருடங்கள்
4. 5 வருடங்கள்

08. ஸையிதுல் முபஸ்ஸிரீன் என்ற பட்டத்தைப் பெற்ற ஸஹாபி,
1. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)
2. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)
3. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)
4. அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழி)

Past Papers Wiki

09. "நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்" என்பது,
1. அல்குர்ஆன் வசனமாகும்.
2. நபி (ஸல்) அவர்களின் கூற்றாகும்.
3. ஸஹாபாக்களின் கூற்றாகும்.
4. மார்க்க அறிஞரின் கூற்றாகும்.

10. தனது குடும்ப செலவிற்கு திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட பணமும் தேவைக்கு அதிகமோ என கருத்திற்கொண்டு தனது ஊதியத்தை குறைக்குமாறு திறைசேரி அதிகாரிக்கு உத்தரவிட்ட கலீபா,
1. உமர் இப்னு கத்தாப் (ரழி)
2. உமர் இப்னு அஸீஸ் (ரழி)
3. அபூபக்கர் (ரழி)
4. உஸ்மான் (ரழி)

11. "ஹிழ்புல் புஜூல்" என்பதன் பொருள்,
1. வஹியை எழுதும் பணி
2. ஹதீஸ் தொகுப்பு
3. சட்ட விளக்கம்
4. சமூகநல அமைப்பு

12. பின்வருவோரில் தற்காலிக மஹ்ரமி உறவு.
1. சகோதரி
2. மனைவியின் சகோதரி
3. மனைவியின் தாய்
4. பால்குடி உறவு சகோதரி

13. உலுல் அஸ்மில் உள்ளடக்கப்படாத நபி,
1. இப்ராஹிம் (அலை)
2. மூஸா (அலை)
3. ஈஸா (அலை)
4. ஆதம் (அலை)

14. பின்வரும் தொழுகையின் ஓதல்களில் ஸுன்னத்தான ஓதல்,
1. ஆரம்ப தக்பீர் கூறுதல்.
2. ஸூரத்துல் பாத்திஹா ஓதல்.
3. ருகூவில் மூன்று முறை தஸ்பீஹ் கூறுதல்.
4. இறுதி ரக்அத்தில் முதலாவது ஸலாம் கூறுதல்.

15. அல்லாஹ் தன்னுடைய அன்பை எத்தனை பங்குகளாகப் பிரித்தான்?
1. 50
2. 100
3. 300
4. 500

(2 x 15 = 30 புள்ளிகள்)

(02) பின்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

[இம்மை, இமாரத், தொழுகை, மறுமை, மூஸா (அலை), கல்வி ஞானம், இப்ராஹிம் (அலை)]

01. மி.ஃராஜ் பயணத்தின் போது ..... பரிசாக வழங்கப்பட்டது.

02. எவர் ..... கொடுக்கப் பெறுகின்றாரோ அவர் நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்று விடுகிறார்.

03. ..... என்பது பூமியை வளப்படுத்தும் பணியாகும்.

04. அபுல் பஷர் என்ற சிறப்புப் பெயருக்குரிய நபி ..... அவர்கள் ஆவார்.

05. பாவமான செயல்களை விட்டும் தொழுகை தடுப்பது ..... பயனாகும்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

பகுதி – II

- **பகுதி இரண்டில் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01) எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடை தருக.
1. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் யாது?
2. அஜ்னபி – மஹ்ரமி என்பதன் பொருளை முறையே குறிப்பிடுக.
3. உம்மஹாத்துல் மு.ஃமினீன் எனப்படுவோர் யார்?
4. முஸ்லிம்கள் ஹிஜ்ரத் சென்ற பிரதேசங்கள் எவை?
5. ஸஹாபாக்கள் எனப்படுவோர் யார்?
6. ஸஹீஹைனில் உள்ளடக்கப்படும் ஹதீஸ் நூல்கள் எவை?
7. ஜிப்ரீல் (அலை) அவர்களின் சிறப்புப் பெயர் யாது?
8. மவ்லூஆன ஹதீஸ் என்பதன் பொருள் யாது?
9. ராத்திபான ஸுன்னத் தொழுகைகள் இரண்டு குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

02) 1. அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்புக்களைக் குறிப்பிடும் ஹதீஸ் ஆதாரம் ஒன்று தருக.
2. ஸுன்னத்தான ஸஜ்தா நிறைவேற்றும் முறைகளைக் குறிப்பிடுக.
3. வாழ்வில் பின்பற்ற வேண்டிய நற்குணங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. அன்னை ஸவ்தா (ரழி) அவர்களின் குணப்பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. பிராத்தனைக்கு அல்லாஹ் பதிலளிக்கும் முறைகளைக் குறிப்பிடுக.
3. பெரும் பாவங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. ஸக்காத், ஸதகா என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
2. மவ்ழூஆன ஹதீஸ்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணிகள் மூன்று தருக.
3. நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரத்தை தடுப்பதற்கு குறைஷியர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவத்தின் பின் இஸ்லாத்தை எத்திவைக்க கட்டளை பிறப்பித்த ஸுரா எது?
2. ஸுரா லுஹா தரும் படிப்பினைகள் மூன்று தருக.
3. பொதுப்பணி செய்த ஸஹாபாக்களின் வாழ்விலிருந்து ஒரு சம்பவம் குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. ஐம்பது நேரத் தொழுகை ஐந்து நேரமாகக் குறைக்கப்படக் காரணமாக இருந்த நபி யார்?
2. ஸுனன் அர்பஆவில் இடம்பெறும் ஹதீஸ் கிரந்தங்கள் மூன்று தருக.
3. பிரார்த்திக்கும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) 1. தாவூத் (அலை) அவர்களுக்கும், ஸுலைமான் (அலை) அவர்களுக்கும் வழங்கப்பட்ட அற்புதத்தை முறையே குறிப்பிடுக.
2. சொல் சார்ந்தவை, செயல் சார்ந்தவை, அங்கீகாரம் பெற்றவை அறபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
3. சிறுவர்களிடத்தில் அன்பாகவும் பண்பாகவும் நடப்பதால் அவர்களிடத்தில் விருத்தியடையும் பண்புகள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - இஸ்லாம்

ISLAM விடைப்பத்திரம் - தரம் - 8

பகுதி – I

(01)

1. 3	6. 1	11. 4
2. 2	7. 2	12. 2
3. 3	8. 1	13. 4
4. 1	9. 1	14. 3
5. 2	10. 3	15. 2

(02)

1. தொழுகை
2. கல்வி ஞானம்
3. இமாரத்
4. இப்ராஹீம் (அலை)
5. இம்மை

பகுதி – II

(01)

1. அபுல் அன்பியா/ கலீலுல்லாஹ்
2. மஹ்ரமி - திருமண உறவுகள் வைத்துக்கொள்ளத் தடைசெய்யப்பட்டவர்கள்.
   அஜ்னபி - திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டவர்கள்.
3. மு.்.மின்களின் அன்னையர்
4. அபீஸினியா (ஹபஷா)
   மதீனா
5. நபி (ஸல்) அவர்களை நேரடியாகக் கண்டு அவர்களைப் பின்பற்றியோர்.
6. ஸஹீஹ் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்
7. நாமூஸுல் அ.்.லம்/ ரூஹுல் குத்ஸ்
8. நபி (ஸல்) அவர்களின் பெயரில் புணைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள்
9. தஹஜ்ஜத் தொழுகை/ வித்ர்/ லுஹா
10. தூய்மை/ வளர்ச்சி/ அபிவிருத்தி/ அருள்

(02)

1. அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்புகள் - என்ற பாடத்தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ள ஹதீஸ்கள் (பக்கம் - 81, 82, 83)
2. ஸஜ்தா திலாவத், ஸஜ்தா ஸஹ்வு, ஸஜ்தா ஷுக்ர்
3. (பொருத்தமான விடைகள்) பக்க எண் - 57

(03)

1. தயாள குணமுள்ளவர்/ பண்பாகப் பழகுபவர்/ வணக்க வழிபாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர்.
2. - கேட்டதை உலகிலேயே கொடுக்கிறான்.
   - மறுமையில் கொடுப்பதற்காக தாமதப்படுத்துவான்.
   - கேட்டதற்குச் சமமான ஒரு தீங்கை அவனை விட்டும் நீக்குவான்.
3. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்/ சூனியம் செய்தல்/ கொலை செய்தல்/ வட்டியை உண்ணுதல்/ அநாதைகளின் சொத்துக்களை அனுபவித்தல்/ போரின் போது புறமுதுகு காட்டி ஓடுதல்/ கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறுதல்.

අ.පො.ස [illegible] ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් [illegible] Past Papers Wiki [illegible] සිවිසෙන්න

(04)

1. பொருத்தமான விடை (பக்க எண் - 45)
2. - அல்லாஹ்வின் அன்பைப் பெறல்.
   - அரசியல் சிந்தனைப் பிரிவுகளுக்கு வலுசேர்த்தல்.
   - ஆட்சியாளர்களிடம் நற்பேறு பெற்றுக் கொள்ளல்.
   - இஸ்லாத்தை மாசுபடுத்த முற்பட்ட நயவஞ்சகர்கள்.
   - வியாபார நோக்கம்.
3. - பைத்தியக்காரன், சூனியக்காரன் என பட்டப்பெயர் சூட்டுதல்.
   - இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை துன்புறுத்தல்.
   - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளைத் தூண்டி நபி (ஸல்) அவர்களைத் திசைத்திருப்ப முயல்தல்.
   - ஷி.ஃபு அபீதாலிப் பள்ளத்தாக்கில் மூன்று ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டனர்.
   - நபி (ஸல்) அவர்களை கொலை செய்ய தீர்மானித்தல்.

(05)

1. ஸுரா முத்தஸிர்
2. பக்கம் 86, 87
3. உஸ்மான் (ரழி) அவர்கள் ரூமாவின் கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்கு வக்ப் செய்து பொதுச் சொத்தாக மாற்றினார்கள்.
   (பொருத்தமான விடை)

(06)

1. மூஸா (நபி)
2. திர்மிதி, இப்னு மாஜா, அபூதாவூத், நஸாஈ
3. பக்கம் 49

(07)

1. தாவூத் (அலை) - இரும்பு மிருதுவாக்கல்.
   ஸுலைமான் (அலை) – ஜின்கள், காற்று போன்றவை வசப்படுத்தப்படல்/ ஏனைய உயிரினங்களின் மொழியை விளங்குதல்.
2. சொல் சார்ந்தவை - கௌலி
   செயல் சார்ந்தவை - பிஅலி
   அங்கீகாரம் சார்ந்தவை - தக்ரீரி
3. - அன்பையும் அரவணைப்பையும் வழங்குவது உற்சாகத்தை ஊட்டி நற்சிந்தனைகளை வளர்க்க காரணமாகின்றது.
   - விரக்தி நிலைக்குப் போகாது மகிழ்ச்சியாக இருப்பர்.
   - அவர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதால் சிறுவர்களும் ஏனையோருடன் அன்பாகவும் பண்பாகவும் இருப்பர்.
   - சிறு வயதிலிருந்தே பயிற்றுவிப்பது அவர்களை நல்ல விடயங்களில் தொடர்ந்து ஈடுபாடுகாட்ட காரணமாதல்.
   - பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உணர்தல்.
   (பொருத்தமான விடை)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank